பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 10 வள்ளுவர் ஆண்டு 2026 கார்த்திகை 08 வெள்ளிக்கிழமை (24-11-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 354

# அரியாலை - கொழும்புத்துறையில் படையுடன் புலிகள் கடும் மோதல்

## பீரங்கித் தாக்குதலுக்குள்ளாகி வீடுகள், சொத்துகள் நாசம்

சாவகச்சேரி, நவம்பர் 24

அரியாலை — கொழும்புத்துறைப் பகுதிகளில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்றுக் கடும் மோதல்கள் இடம்பெற்றன.

அரியாலையிருந்து கொழும்புத்துறைப் பக்கமாக முன்னேறும் நோக்குடன் டாங்கிகள், பீரங்கிகளின் உதவியுடன் படையினர் நடத்திய தாக்குதல்களை எதிர்த்து விடுதலைப் புலிகள் பெரும் சமர் நடத்தினர்.

டாங்கி, பீரங்கித் தாக்குதல்களால் வீடுகளும் மக்களின் உடைமைகளும் பெருமளவில் நாசமாகின.

''சூரியப் பிரகாசம்'' இராணுவ நடவடிக்கையில் அரியாலைப் பகுதியில் இருந்து நேற்றுக்காலை கொழும்புத்துறைப் பகுதியை நோக்கி முன்னேற முயன்ற படையினரை வழிமறித்துவிடுதலைப் புலிகள் கடும் சமர் புரிந்தனர்.

அரியாலைப் பகுதியில் இருந்து கண்டி வீதி ஊடாக கொழும்புத்துறைப் பகுதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பலாலிக்கான விமான சேவை இடைநிறுத்தம்

கொழும்பு, நவ. 24

அன்ரனோவ் விமானம் ஒன்று நேற்று முன்தினம் காரைநகருக்குச் சமீபமாக கடலில் வீழ்ந்ததை அடுத்து யாழ்ப்பாணத்துக்கான சகல விமானப் போக்குவரத்துக்களையும் ஸ்ரீலங்கா அரசு இடைநிறுத்தி உள்ளது.

அதேவேளை, ஸ்ரீலங்கா விமானப்படை விமானங்கள் பலாலிக்கு தொடர்ந்து சேவையில் ஈடுபடும் என்று விமானப்படைத் தலைவர் எயர்வைஸ்மார்ஷல் அஞ்சலோ பீரிஸ் தெரிவித்துள்ளார்.

(இ-3)

# வடமராட்சி மீது நேற்று அகோர ஷெல் தாக்குதல்

## கர்ப்பிணி உட்பட இருவர் பலி; 8பேர் காயம்

வடமராட்சி, நவ. 24

வடமராட்சியின் கரையோரப் பகுதிகளை நோக்கி பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று மூன்று தடவைகள் தொடர்ச்சியான அகோர ஆட்லறி ஷெல் வீச்சுக்கள் நடத்தப்பட்டன.

வல்வெட்டித்துறை, கம்பர்மலை, ஊரிக்காடு, மயிலியதனை, தொண்டமானாறு, உடுப்பிட்டி, நவிண்டில், வல்வெட்டி, கற்கோவளம் ஆகிய இடங்களை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

அதிகாலை 3 மணி முதல் தொடர்ச்சியாக சுமார் அரை மணி நேரத்துக்கும் —

விடிகாலை 6மணி தொடக்கம் தொடர்ச்சியாக 6. 30 மணி வரையும் —

மாலையில் சுமார் 5 மணி தொடக்கம் 10 நிமிட நேரமும் — பலாலியில் இருந்து தொடர்ச்சியாக ஷெல் வீச்சுக்கள் நடத்தப்பட்டன.

விடிகாலையில் நடத்தப்பட்ட ஷெல் வீச்சினால் கம்பர்மலையில், ஒன்பது மாதக் கர்ப்பிணி ஒருவரும், அவரது மைத்துனியும் உயிரிழந்தனர்.

கர்ப்பிணிப் பெண்ணின் கணவர், தந்தையார், மகன்

( 6ஆம் பக்கம் பார்க்க)

## கொல்லப்பட்ட அனைவரும் விசேட கொமாண்டோக்கள்

கொழும்பு, நவ. 24

கடலில் வீழ்ந்து மூழ்கிய அன்ரனோவ் விமானத்தில் இருந்த படையினர் அனைவரும் இறுதித் தாக்குதல் நடவடிக்களுக்காக கொண்டு வரப்பட்ட விசேட கொமாண்டோ பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் இருவர் அதிகாரிகள் ஆவர்.

விமானத்தில் இருந்த மொத்தம் 62 பேரில் எவருமே உயிர் பிழைத்திருப்பது சாத்தியமில்லை என்று விமானப்படை உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-8)

## புதனன்று 17படையினர் பலி

யாழ்ப்பாணம், நவ. 24

புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் நடந்த சண்டையில் 17 படையினர் கொல்லப்பட்டனர் என்றும் —

5 அதிகாரிகளும், 88 படையினரும் காயமடைந்தனர் என்றும் — வாராந்த செய்தியாளர் மாநாட்டில் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க தெரிவித்தார். (இ-3)

# காரைநகருக்கு அருகே கடலில் அன்ரனோவ் விமான சிதைவுகள்

## படையினரில் ஒருவரின் சடலமும் மீட்பு

கொழும்பு, நவ. 24

அன்ரனோவ் - 32 விமானத்தின் சிதைவுகள் காரைநகருக்கு அருகே உள்ள கடலில் இருந்து மீட்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

காரைநகர் கடற்படை முகாமுக்கு வடக்கே 10 கிலோமீற்றர் தொலைவில் உள்ள கடலில் விமானத்தின் பாகம் ஒன்றும் பல சிதைவுகளும் கண்டுகிடிக்கப்பட்டுள்ளன.

கொல்லப்பட்ட படையினரில் ஒருவரின் சடலமும் மீட்கப்பட்டிருக்கிறது.

அன்ரனோவ் விமானம் வீழ்ந்தது குறித்து விசாரணை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## காயமடையும் படையினரை கொண்டுசெல்வதில் சிக்கல்

கொழும்பு, நவ. 24

அன்ரனோவ் - 32 விமானம் வீழ்த்தப்பட்டிருப்பது, தற்போதைய இராணுவ நடவடிக்கையில் காயமடையும் படையினரை கொழும்புக்கு எடுத்துச் செல்வதை பெரிதும் பாதிக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

சண்டையில் காயமடையும் பெருமெண்ணிக்கையான படையினரை அவசர சிகிச்சைக்காக கொழும்புக்கு ஏற்றிச் செல்வதில் இந்த அன்ரனோவ் விமானமே ஈடுபடுத்தப்பட்டு வந்தது.

இது தவிர படையினருக்கான உணவு. ஆயுத விநியோகப் பணியிலும் இந்த விமானங்களே ஈடுபடுத்தப்பட்டுவந்தன.

போதிய உணவு மற்றும் ஆயுத தளபாடங்களைச் சேமித்த பின்னரே [illegible]தைய படை நடவடிக்கை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கொட்டகதெனிய திடீரென இடமாற்றம்

கொழும்பு, நவ. 24

கொழும்பு பிராந்திய பிரதிப் பொலீஸ் மா அதிபர் ஜி. பி. கொட்டகதெனிய திடீரென இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அவரது இடத்துக்கு களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரியின் பிரதிப் பொலிஸ் மா அதிபர் [illegible] நாயக்கா நியமிக்கப்பட்டிருக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்தடுத்து விமானிகளை இழந்தது பின்னடைவு

### இராணுவ அதிகாரிகள் கருத்து

கொழும்பு, நவ. 24

விமானப்படை கடந்த நான்கு நாள்களில் இரண்டு உயர்ரக விமானங்களை இழந்திருப்பதைவிட பல விமான ஓட்டிகளை இழந்திருப்பது துரதிர்ஷ்டவசமானது என்று இராணுவ வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

விமானப்படையில் ஏற்கனவே விமான ஓட்டிகளுக்குப் பெரும் பற்றாக்குறை நிலவுகின்ற நிலையில் இந்நிகழ்வுகள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாண்டிக்குளம் ஊடாக லொறியில் பொருள் எடுத்துவர மீண்டும் தடை

சாவகச்சேரி, நவ. 2₹
தாண்டிக்குளம் ஊடாக லொறிகள் மூலம் பொருள் எடுத்து வருவது மீண்டும் தடைப்பட்டுள்ளது.

வவுனியாவில் இருந்து எடுத்து வரப்படும் பொருள்களை தாண்டிக் குளத்துக்கு அருகில் சாந்தசோலை என்னும் இடத்தில் வைத்து வடக்கே இருந்துவரும் லொறியில் ஏற்றுமாறு படையினர் உத்தரவிட்டிருந்தனர்.

பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் வன்னி மாவட்ட அரச அதிகாரிகள் நடத்திய பேச்சையடுத்து இந்த உத்தரவு தளர்த்தப்பட்டிருந்தது.

இதனையடுத்து கடந்த வாரம் லொறிச்சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட போதும் —

படையினரின் கெடுபிடி மீண்டும் ஆரம்பித்ததையடுத்து கடந்த செவ்வாய்க்கிழமையுடன் லொறிச்சேவை தடைப்பட்டது.

இதனால் வன்னியில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## குடும்ப அட்டை செயலகங்கள் இன்று இயங்கும்

சாவகச்சேரி, நவ. 24
இராணுவ நடவடிக்கை காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டிருந்த குடும்பப் பதிவு அட்டைச் செயலகங்கள் இன்று தொடக்கம் வழமையான செயற்பாடுகளுடன் பழைய தபாற் கந்தோர் வீதி சாவகச்சேரியில் அமைந்துள்ள அனுமதி வழங்கும் செயலகத்தில் இயங்கும் என்றும்—

அத்துடன் வலிகாமத்தில் இயங்கிய அனைத்து குடும்பப் பதிவு அட்டைச் செயலகங்களும் மேற்குறிப்பிட்ட முகவரியிலேயே இயங்கும் என்றும் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் அறியத் தருகின்றனர். (இ)

## வைப்பகத்துக்கு வருமாறு அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 24
கச்சாய் வீதி சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்துக்கு பின்வருவோரை இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அடையாள ஆவணங்களுடன் சமூகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

அவர்கள் விவரம் வருமாறு:-

★ அ. சிவராசா, அரசடி றோட் சங்கத்தானை, சாவகச்சேரி.

★ தேவஞானி செல்வம், ராஜேந்திரம் அன்னம்மா மே/பா, மோகன் வீடு, அழுத்தணை மிருசுவில் (அல்லது) கரம்பனை, எழுதுமட்டுவாள்.

★ ஜே. மரியநாயகி. நயினாமுனை முகாம், செம்பியன்பற்று வடக்கு, செம்பியன்பற்று. (இ)

# இடம்பெயர்ந்தோர் பிரச்சினை சாதுரியமாக கையாளவேண்டும்

## "நாஷனல் ஹேரால்ட்" கருத்து

புதுடில்லி நவ 24
இராணுவ ஆக்கிரமிப்பை அடுத்து யாழ். குடாநாட்டில் இருந்து வெளியேறியுள்ள தமிழ் மக்களின் பிரச்சினையை ஜனாதிபதி சந்திரிகா சாதுரியமாகக் கையாள வேண்டும்

இந்தியாவில் வெளியாகும் ''நாஷனல் ஹேரால்ட்'' பத்திரிகை இவ்வாறு தெரிவித்துள்ளது.

இலங்கை நிலைமை தொடர்பாக அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்திருப்பதாவது:-

தமிழ் மக்களின் இதயங்களைக் கவர்வதே தற்போது ஜனாதிபதிக்கு முன் உள்ள முக்கிய சோதனை ஆகும்.

முதலில் அவர் 1987 இல் நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தத்துக்கு இணங்க சமஷ்டி அமைப்பின் கீழ் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைகளை வழங்கவேண்டும் என்றும் நாஷனல் ஹேரால்ட் தெரிவித்தது. (இ-ஐ)

# சந்திரிகா நேற்று விசேட செய்தி

கொழும்பு, நவ. 24
தற்போதைய சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நாட்டில் குழப்பம் விளைவிக்க முயலும் இனத்துவேச சக்திகள் குறித்து எச்சரிக்கையாக இருப்பது அரசியல் தலைமைத்துவத்தினதும், மக்களினதும் பொறுப்பு ஆகும்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நாட்டு மக்களுக்கு நேற்று விடுத்த விசேட செய்தியில் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் தனது செய்தியில் தெரிவித்ததாவது:-

இந்த யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரானது அல்ல; பயங்கரவாதிகளுக்கு எதிரானதே ஆகும்.

நீண்டகாலமாகப் பிளவுபட்டிருந்த எமது தாயகத்தை ஐக்கியப்படுத்துவதற்கான வரலாற்று ரீதியான போராட்டத்தின் பலன் விரைவில் கிடைக்கவுள்ளது.

தமது உயிரைப் பணயம் வைத்து பாதுகாப்புப் படையினர் நடத்தும் யுத்தத்தின் பலாபலன் விரைவில் கிட்டவுள்ளது.

யாழ்ப்பாணம் விடுதலைப் புலிகளிடம் இருந்து விடுவிக்கப்பட்டது என்ற நற்செய்தி அடுத்த சில தினங்களுக்குள் கிடைக்கும்.

எவருக்கும் தீங்கிழைக்காத விதத்தில் இந்த வரலாற்று ரீதியான வெற்றியைக் கொண்டாடவேண்டும்.

இது சிங்கள மக்களின் தனிப்பட்ட வெற்றியோ, தமிழ் மக்களின் தோல்வியோ அல்ல — என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

சகல சமூகத்தினரதும் உரிமைகளைப் பாதுகாக்கக் கூடிய சமாதானம் மிக்க நாட்டை கட்டி எழுப்ப ஐக்கியப்படுமாறும் ஜனாதிபதி தனது செய்தியில் நாட்டு மக்களை வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார். (இ-ஐ)

# யாழ்ப்பாணத்துக்கான விதை கிழங்கு முல்லைக்கு

சாவகச்சேரி, நவ. 24
யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு என்று இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக் கிழங்கு முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட விவசாயிகளுக்காக முன்னாள் யாழ். அரச அதிபரால் இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக்கிழங்கை தற்போதைய சூழ்நிலையில் யாழ். மாவட்ட விவசாயிகளுச்கு வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுறது.

தாண்டிக்குளம் ஊடாக கடந்த செவ்வாய்க்கிழமை விதை கிழங்கு எடுத்துவரப்பட்டது. (இ-3)

# பிளாஸ்ரிக் கூரைகள் கொண்ட குடிசைகள் எழுதுமட்டுவாழில் அமைக்கப்படும்

செம்பியன்பற்று நவ. 24
வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து கொடிகாமம் எழுதுமட்டுவாள், மிருசுவில் பகுதிகளில் உள்ள சந்தைகளில் தங்கி இருப்போருக்கு முதற்கட்டமாக பிளாஸ்ரிக் கூரைகள் கொண்ட குடிசைகள் அமைத்துக் கொடுக்கப்பட உள்ளன.

மிருசுவிலில் உள்ள பிரதேச சபை உப அலுவலகத்தில் நடைபெற்ற இடம்பெயர்ந்தவர்களுக்கான நிவாரணப் பணிகள் சம்பந்தமான கலந்துரையாடலில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலுக்கு கொடிகாமம் வலயம் உதவி அரச அதிபர் இ. சந்திரராசா தலைமை வகித்தார்.

கலந்துரையாடலில் சிறுவர் பாதுகாப்பு நிதியம், தமிழர் புனர்வாழ்வுக் கழகம், செயர் ஸ்தாபனம், எம். எஸ் நிறுவனம் ஆகியவையும், வலிகாமத்தில் இருந்து இடம் பெயர்ந்துள்ள 8 உதவி அரச அதிபர்களும் கலந்து கொண்டனர்.

5 குடிசைகளுக்கு ஒரு

( 6 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி மீது...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ஆகிய மூவரும் காயமடைந்தனர்.

இச் ஷெல் வீச்சினால் மற்றும் மூவரும் காயமுற்றனர்.

இறந்தவர்களும், காயமுற்றவர்களும் மானிப்பாய் மேற்கிலிருந்து இடம்பெயர்ந்து கம்பர்மலையில் வசித்து வந்தவர்கள் ஆவர்.

கம்பர்மலை பாரதிதாசன் சனசமூக நிலையத்துக்கு அண்மையில் உள்ள மரம் ஒன்றில் விழுந்து ஷெல் வெடித்துச் சிதறியதில் —

பாதுகாப்புக்கருதி வீதி ஓரத்தில் இருந்த மதகு ஒன்றுடன் நின்ற ஒன்பது மாதக் கர்ப்பிணியான சிவபாலன் ரமணி (29 வயது) அவரது மைத்துணி சிவகுமார் சிவாஜினி (36 வயது) ஆகிய இருவரும் மரணமானார்கள்.

ரமணி அந்த இடத்திலேயே பலியானார். இவருக்கு இன்னும் பத்து நாள்களில் குழந்தை கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

சிவாஜினி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்படும்வழியில் காலமானார்.

ரமணியின் கணவரான தனபாலசிங்கம் சிவபாலன் (32 வயது), தந்தையாரான கணபதிப்பிள்ளை சின்னத்துரை (68 வயது), மகளான சிவபாலன் வைஷ்ணவி (3வயது)—

மற்றும் சிவராசாசிவகுமார் (21 வயது), பாக்கியராஜ் ரஜீவன் (15 வயது), செந்தில்வேல் அபிராமி (10 வயது) — ஆகியோரும் காயமடைந்தனர்.

காயமடைந்தோர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இத்தாக்குதலினால் பலவீடுகள் சேதமடைந்தன; பனை மரங்கள் முறிந்து வீழ்ந்தன.

### மாலையில்

மாலை 5 மணியளவில் நடத்தப்பட்ட ஷெல் வீச்சினால் இரு பெண்கள் காயமுற்றனர்.

கற்கோவளத்தில் இரு வீடுகளுக்கு இடையில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் மயிலிட்டியில் இருந்து இடம் பெயர்ந்து வாழ்ந்த சிவதாசன் காந்தமலர் (33 வயது), கற்கோவளத்தைச்சேர்ந்த துரையப்பா நவமணியம்மா (75 வயது) ஆகிய இருவரும் படுகாயமடைந்தனர்.

இவர்களும் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இப்பகுதியில் உள்ள பல வீடுகளும், ஐஸ் கட்டடத் தொழிற்சாலையும் சேதமடைந்தன.

(அ-173-3-15-80)

## உதவிப் பணம் பெறுவோரை பதிய கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 24
வலிகாமம், தீவகம் பிரதேச செயலர்கள் பிரிவுகளைச் சேர்ந்த அரசாங்க பொதுசன மாதாந்த உதவிப் பணம் மற்றும் காசநோயாளர்களுக்கான கொடுப்பனவு, புற்றுநோயாளர்களுக்கான கொடுப்பனவுகளைப் பெறுவோர் தற்போது தாம் வசிக்கும் பிரதேசத்துக்கு அண்மையில் உள்ள கிராம சேவையாளர்களிடம் தங்களது விவரங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு யாழ். அரசாங்க அதிபர் திரு. செ.பத்மநாதன் கோரி உள்ளார்.

இப்படிப் பதிவு செய்வது மூலம் எதிர்காலத்தில் தமது கொடுப்பனவுகளை அவர்கள் சிரமமின்றிப் பெறமுடியும் என்றும்—

அடுத்த மாதம் தொடக்கம் இக் கொடுப்பனவுகளை அவர்களது அலுவலகத்தில் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ)


## தேடுகிறார்

சுழிபுரத்தை சேர்ந்த முத்துதம்பி அமுதலிங்கம் அவர்களின் பிள்ளைகளை டாக்டர் க. இளங்கோ ஞானியார் தேடுகிறார். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

வாட் இல: 10
ஆதார வைத்தியசாலை
மந்திகை

(39372)

## உடன் சந்திக்கவும்

றக்கா றோட்டில் வசிக்கும் ரவியின் தாயார்
திரேசம்மாவை

ராஜேந்திரா வீதியில் வசிக்கும்
நகுலனின் தாயார்
பாக்கியவதி தேடுகிறார்.

தொடர்பு: திருமதி செல்வராணி,
வேளாபள்ளம் (வாசிகசாலை அருகில்)
மிருசுவில்.

(39275)

## கட்டடப் பொருள்கள் வழங்கல்

கீழ்வரும் கட்டடப் பொருள்களைத் தொகையாக வழங்கக் கூடியவர்களை விலை விவரத்துடன் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இயங்கும் குடியிருப்புச் செயலணிக் குழுவைத் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

| | |
|---|---|
| 01. காட்டுத்தடி | — 2''க்குக் குறையாத விட்டமுடையது |
| 02. பனைமரம் - 4'' அகலம் | — 6, 8, 10 முழம் |
| 03. பனம் சலாகை | — 6 முழம் அல்லது அதன் மடங்குகள். |
| 04. தென்னங் கிடுகு | |
| 05. தென்னந்தும்புக் கயிறு (இளைக்கயிறு) | |
| 06. தென்னங் கப்பு | — 6, 8 முழம். |
| 07. பனங் கப்பு | — 6, 8 முழம். |
| 08. சவுக்கு, மூங்கில் தடி | — 2'' விட்டமுடையது 6, 8 முழம். |
| 09. பனம் ஈர்க்கு | |

ஒப்பம்.
செ. பத்மநாதன்
யாழ். மாவட்ட அரசாங்க அதிபர். (சி/3105)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டுக்குள் மக்களை முடக்கி வைப்பதற்கே கிளாலிப்பாதைத் தடை

## பி.பி.ஸி. செய்தியாளர் கருத்து

லண்டன், நவ. 24

குடாநாட்டில் இருந்து வன்னி பெரு நிலப்பரப்புக்கு மக்கள் செல்வதைத் தடுப்பது மூலம் கைப்பற்றும் பிரதேசங்களில் மக்களை முடக்கி வைத்திருக்க முடியும் என்று ஸ்ரீலங்கா அரசு கருதுகிறது.

பி.பி.ஸி. கொழும்புச் செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னி நேற்று மேற்கண்டவாறு பி.பி.ஸிக்கு தெரிவித்தார்.

கிளாலிப் பாதைத் தடையால் குழப்பமான நிலைமை இருந்து வருகிறது. இதன் பாதிப்பு என்ன? என்று பி.பி.ஸி. செய்தியாளரிடம் கேட்கப்பட்டபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஐந்து ஆண்டுகளாக புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளை இராணுவம் பிடித்தாலும் அங்கு மக்கள் இல்லாத நிலை இருந்து வருகிறது.

தமது பாதுகாப்பு, இருப்பிட வசதிகள் கருதி வன்னி பெரும் நிலப்பரப்புக்கு சுமார் ஒன்றரை லட்சம் மக்கள் சென்றுள்ளனர்.

இதனைத் தடுப்பது மூலம் கைப்பற்றும் பகுதிகளில் மக்களை முடக்கி வைத்திருக்க முடியும் என்று ஸ்ரீலங்கா அரசு கருதுகிறது.

இப்படி ஜோர்ஜ் ஆர்னி கூறினார். (இ)

# நல்லூரைச் சேர்ந்த மதகுரு கொஸ்லந்தையில் கைது!

கொழும்பு, நவ. 24

நல்லூர் சென். ஜேம்ஸ் தேவாலயத்தின் முன்னாள் மதகுருவும் 17 வயது இளைஞர் ஒருவரும் கொஸ்லந்தை சென். ஜேம்ஸ் தேவாலயத்தில் வைத்து கைது செய்யப்பட்டிருப்பதாக 'லங்காதீப' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் பணிப்புரைக்கு அமைய இவர்கள் இருவரும் 3 மாதங்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்லூரைச் சேர்ந்த மேற்படி மதகுரு கடந்த பெப்ரவரி மாதம் முதல் கொஸ்லந்தை தேவாலயத்தில் பணிபுரிந்து வருகிறார் என்றும்—

அவரைப்பற்றி சந்தேகத்துக்கிடமான தகவல் கிடைத்ததை அடுத்தே பண்டாரவளைப் பொலீஸார் அவரைக் கைது செய்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ - 6)

# 10 தமிழ் இளைஞர்கள் வத்தளைப் பகுதியில் கைது

கொழும்பு, நவ. 24

கொழும்பு வத்தளைப் பகுதியில் வைத்து கடந்த 16-ஆம் திகதி 10 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் இருந்து கொழும்புக்கு வந்த இவர்களிடம் தேசிய அடையாள அட்டை இருக்காததை அடுத்து சந்தேகத்தின் பேரில் அவர்களைக் கைது செய்ததாக குற்றத்தடுப்பு பொலீஸ் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ஐ-6)

### இடம் பெயர்ந்தோர் விவரம் பெற

# யாழ். செயலகத்தில் தகவல் மையம்

இடம்பெயர்ந்துள்ள மக்கள் தொடர்பான விவரங்களை பெறுவதற்காக சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இயங்கும் யாழ். செயலகத்தில் தகவல் மையம் ஒன்று இயங்கிவருகிறது.

இடம்பெயர்ந்து வடமராட்சி, தென்மராட்சிப் பகுதியில் தங்கியுள்ள மக்களுக்கு தேவையான உதவிகள், மற்றும் அவர்கள் தொடர்பான விவரங்கள் இந்தப் பிரிவில் கவனிக்கப்படும். (இ-3)

# போரை நிறுத்தக் கோரி கொழும்பில் கூட்டம்

கொழும்பு, நவ. 24

வடக்கில் யுத்தத்தை உடன் நிறுத்தி, தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தை அமுல் செய்யுமாறு கோரி கொழும்பில் பொதுக் கூட்டம் ஒன்றை நடத்த ''தேசத்தின் பாதுகாப்புக்கான குரல்'' என்ற அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.

இது தொடர்பாக இந்த அமைப்பு தென்பகுதி பத்திரிகைகளுக்கு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

கலாநிதி சுனில் விஜய சிறிவர்த்தன, பேராசிரியர் எம். ஸ்ரீயானந்த, கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தின, டாக்டர் கே. வேலாயுத பிள்ளை, ஹரி அபே குணவர்த்தன, எஸ்.பாலகிருஷ்ணன், மோஹீர் ரஹ்மான், வீனஸ் ஜயதிலக, பீ.திருநாவுக்கரசு, பீ. பீ. சரணபால. டாக்டர் சுனில் ரத்னபிரிய, சரணபால சில்வா, டாக்டர் எஸ். பி. விக்கிரம சிங்கா, போல் டேவிட் ஆசிரோார் அங்கம் வகிக்கும் இந்த அமைப்பு போருக்கு எதிராக நடத்தவுள்ள கூட்டத்தில் கவந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளது. (ஐ-6)

# நகரைக் கைப்பற்றியவுடன் அமைதி பேணுங்கள்

## அரச எம். பிக்களிடம் கோரிக்கை

கொழும்பு, நவ. 23

படையினர் யாழ், நகருக்குள் பிரவேசித்ததும் நாடுமுழுவதும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்குத் தேவையானசகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

பிரதம கொறடா ரிச்சட் பத்திரனவும், பாதுகாப்பு பிரதி அமைச்சர் கேணல்அனுருத்த ரத்வத்தையும் இந்த வேண்டுகோளை விடுத்தனர்.

நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழும் தமிழ் மக்களுக்கு எவ்வித கஷ்டமும்ஏற்படாமல இருக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

புதனன்று காலை நடைபெற்ற அரச நாடாளுமன்ற உறுப்பினர் குழுக் கூட்டத்தில் இவ்வாறு வலியுறுத்திக் கூறப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

# மட்டக்களப்பு மோதலில் 7 போராளிகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம் நவ. 22

மட்டக்களப்பு சந்தி வெளியில் கடந்த ஞாயிறன்று ரோந்து சென்ற படையினர் மீது நடத்தப்பட்ட வெற்றிகரத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் ஏழு போராளிகள் வீரச்சாவடைந்தனர். அவர்களின் பெயர்கள் வருமாறு:-

★ லெப்டினன்ட் பரமசிவம்

★ 2 ஆம் லெப்டினன்ட் சுதாசேகர்

★ 2 ஆம் லெப்டினன்ட் வெற்றிவேல் அல்லது இறைவாசன்

★ பெண் போராளியான 2 ஆம் லெப்டினன்ட் சந்திரா

★ வீரவேங்கை ஈழபாண்டியன் அல்லது ஜெயக[illegible]

★ வீரவேங்கை அ[illegible]

★ வீரவேங்கை அருந்தன்

(ஐ)

# அன்ரனோவ் விமானத்தை புலிகள் ஏவுகணையால் வீழ்த்தி இருக்கலாம்

## ஸ்ரீலங்கா ராணுவ வட்டாரங்கள் கருத்து

லண்டன், நவ. 24

அன்ரனோவ் விமானத்தை புலிகள் ஏவுகணையால் சுட்டு வீழ்த்தியிருக்கலாம்.

இப்படி ஸ்ரீலங்கா ராணுவ வட்டாரங்களை ஆதாரம் காட்டி பிரெஞ்சு செய்தி ஸ்தாபனம் செய்தி வெளியிட்டுள்ளது.

வெப்பத்தை பின்தொடர்ந்து சென்று தாக்கும் ஏவுகணை (Heat seeking missile) மூலம் இந்த விமானம் வீழ்த்தப்பட்டிருக்கலாம் என்றும் பிரேஞ்சு செய்தி ஸ்தாபனம் தெரிவிப்பதாக டுபாய் வானொலி தெரிவித்தது.

இதற்கிடையில் அன்ரனோவ் விமானம் வீழ்ந்த சம்பவம் அரசுக்கு பின்னடைவை ஏற்படுத்தினாலும் புலிகளின் கோட்டையாகக் கருதப்படும் யாழ்ப்பாணத்தை விரைவில் கைப்பற்றிவிட முடியும் என்று கொழும்பில் ராணுவத் தளபதி ஒருவர் நம்பிக்கை தெரிவித்திருப்பதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ)

# சடலத்தை பொறுப்பேற்க கோரிக்கை

பொலிகண்டிப் பகுதியில் கடந்த செவ்வாயன்று இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சில் பலியான கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த செல்லத்துரை விக்கினேஸ்வரன் (சோதி) என்பவரது சடலம் உறவினர்கள் அடையாளம் காண்பதற்காக தென்மராட்சி கோட்டச் செயலகத்தில் வைக்கப்பட்டுள்ளதாகவும் —

உறவினர்கள் அங்கு வருகை தந்து சடலத்தைப் பொறுப்பேற்றுச் செல்லுமாறும் மாவீரர் பணிமனை பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

(ஐ)

# தமிழ்-முஸ்லிம் ஒற்றுமை: அவசியம் குறித்து அஷ்ரப்

தமிழர்களும் முஸ்லிம்களும் தமக்கிடையே கருத்து வேறுபாடுகளையும் மோதல்களையும் ஆரம்பித்ததால் தமிழீழ உரிமைப் போராட்டம் சிங்கள பேரினவாதச் சக்திகளால் மலினப்படுத்தப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் துறைமுகங்கள், கப்பல் துறை, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சருமான எம். எச், எம். அஷ்ரப் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

போர் உக்கிரம் அடைந்து வரும் இந்த காலக்கட்டத்தில் போரின் முடிவில் அனைவரும் சமாதனத்தை எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். சட்டம் மூலமும அதிகாரப் பங்கீடு மூலமும் ஏற்படும் சமாதானம் நிரந்தரமானது அல்ல. சட்டம் மூலம் சமாதானத்தை ஏற்படுத்த முடியுமானால் சட்டம் மூலம் அதனை இல்லாமல் செய்யவும் முடியும்.

இதில் மிகவும் பிரதானமானது வடக்கு - கிழக்கில் உள்ள தமிழர் — முஸ்லிம்களிடையே உள்ள சமாதானம் ஆகும்.

ஆகவே சட்டங்களுக்கு அப்பால் உயர்ந்து மனிதாபிமான அடிப்படையில் சமூகங்களுக் கிடையே சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும்.

வடக்கில் இருந்து அகதிகளாக வரும் தமிழர்களுக்கு முஸ்லிம்கள் உதவ வேண்டும்

இப்படி அவர் கூறினார்.

# மமதை வீழ்ந்தது! சத்தியம் வென்றது!!

இயமதூதுவர் வந்தவான் ஊர்தியை
இடையிற்காண வில்லையாம்; எங்களின்
பகைவனேறிடும் இயந்திரப் பறவையோ
பார்த்திருக்க வான் பரப்பிலே... மறைந்ததாம்.
உவகையோடிதை ஊரெலாம் சொல்லுவோம்.
உறவு கூடியே குரவைகள் கொட்டுவோம்.
மமதை வீழ்ந்தது; 'சத்தியம்' வென்றது.
மண்ணிலின்னொரு ''புண்ணியம்'' பூத்தது.

★ ★ ★

என்னைவென்றிட இங்கொரு 'சக்தி'யும்
இல்லையென்று வானேறியே வந்தவா!
அன்னை மண்ணினை அள்ளியே தின்றிட
அகலக் காலெடுத் திங்குமே வந்தவா!
உன்னையாரடா மண்ணிலே.. வீழ்த்தினர்?
''உண்மை'' வென்றது எதிரிவா னூர்திகள்
இன்னுமின்னும் விழுந்திடும்; எங்களின்
இன்னல் யாவுமே தூசெனப் பறந்திடும்.

★ ★ ★

தொட்டு வணங்கிய தாய்மடி விட்டெமைத்
தொலைத்தவா! எமையாளவா எண்ணினாய்?
பொட்டழித்துநம் தங்கையர் பூவினைப்
பொசுக்கிவிட்டவா ஆளவா எண்ணினாய்?
அட்டதிக்கும் அதிரவே வலம்வரும்
''அன்ரனோவ்''விலே ஏறியா வந்தனை?
பட்டுப் போனது உன்திமிர் :''சத்தியம்''
[illegible] ''அதர்மத்தை'' அழித்தது.

— புதுவை இரத்தினதுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்


விற்பனைக்கு

முதல் உரிமை பாவனையாளரின் நீலநிற வெஸ்பா ஸ்கூட்டர் உடன் விற்பனைக்குண்டு. Dr. Balasubramaniam முதலாவது வீடு. 1 ஆம் ஒழுங்கை (ரஞ்சன் பூங்கா முன்), 1 ஆம் கட்டை, புலோலி கிழக்கு, பருத்தித்துறை. (39367),

பாவிக்காத புதிய கூரைத் தகரங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 501 C/o உதயன், சரசாலை சாவகச்சேரி. (ஈ 101)


# எந்த ஒரு கூட்டுறவுக் கிளையிலும் மண்எண்ணெய், மா பெற வசதி

யாழ்ப்பாணம், நவ. 24

பங்கீட்டு அட்டைக்குப் பணத்துக்கு வழங்கப்படும் மாவையும் மண்எண்ணெய்யையும் இடம் பெயர்ந்த மக்கள் தாங்கள் வசிக்கும் இடத்துக்கு அணமையில் உள்ள எந்தவொரு ப.நோ.கூ சங்கக் கிளையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

தாம் வாழும் இடத்துக்கு அண்மையில் உள்ள ப.நோ.கூ.ச. கிளையினர் இப்பொருள்களை வழங்க மறுத்தால் இடம் பெயர்ந்த மக்கள் அது குறித்து அத்தியாவசிய சேவைகள் பிரிவுக்கு முறைப்பாடு செய்யுமாறு— யாழ்.செயலக உணவு விநியோக இணைப்பு அதிகாரி திருமதி க. சிவசிதம்பரம் கேட்டுள்ளார்.

மாவும், மண்எண்ணெய்யும் இடம்பெயர்ந்த, இடம் பெயராத மக்களுக்கு பணத்துக்கு வழங்கப்படும் என்றும்—

3 பேருக்கு உட்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு 3 கிலோ மாவும், 4 பேரும் அதற்கு மேற்பட்ட உறுப்பினர்களையும் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு 5 கிலோ மாவும்—

ஒவ்வொரு குடும்பத்திற்கும் 2 லீற்றர் மண்எண்ணெய்யும்—வழங்கப்படும் என்றும் உணவு விநியோக இணைப்பு அதிகாரி வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பங்கீட்டு அட்டை இல்லாதவர்களை தாம் தற்காலிகமாகத் தங்கி உள்ள பகுதிக் கிராம சேவகருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ-3)

## சிகிச்சைக்கு வருவோர் அதிகரிப்பு

சாவகச்சேரி, நவ. 24

சுகாதாரத் திணைக்களத்தினால் அண்மையில் சரசாலையில் ஆரம்பிக்கப்பட்ட அரசினர் மத்திய மருந்துச் சாலையில் சிகிச்சைக்கு வருவோர் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்துள்ளது.

தினமும் மக்கள் நீண்ட கியூவில் நின்று சிகிச்சை பெற்று வருவதைக் காணமுடிகிறது.

இந்த மருந்துச் சாலையில் போதிய இடவசதி இல்லாததால் புதிதாகக் கொட்டகை அமைக்கப்பட்டுள்ளது. (ஐ-135)

## தமிழ்ப் பெண் கைது

பொலனறுவையில் வைத்து கடந்த 16 ஆம் திகதி தமிழ் பெண் ஒருவரைப் படையினர் கைதுசெய்துள்ளனர்.

கிரனேட் ஒன்றும், சயனைட் குப்பி ஒன்றும் அவரிடம் இருந்ததாக 'தினமின' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது. (ஐ-6)

# கொழும்பு தமிழ் இளைஞர் வவுனியா வருகின்றனர்

கொழும்பு, நவ' 24

கொழும்பில் உள்ள தமிழர்கள் மீது படையினரின் கெடுபிடிகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்ற பீதி கொழும்புத் தமிழர்கள் மத்தியில் நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது,

லொட்ஜுகளிலும் உறவினர் வீடுகளிலும் தங்கி உள்ளவர்கள், வயது வேறுபாடின்றி பகலிலும் சரி இரவிலும் சரி திடீரென நுழையும் படையினரிடம் சிக்க வேண்டிய நிலை இருந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்படி கைதாகும் இளைஞர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுகின்றனர்.

இப்படி ஆஜர் செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட இளைஞர்கள் சிலர் கொழும்பில் தங்கி இருக்க முடியாது வவுனியா திரும்பி உள்ளனர். சிலர் யாழ்ப்பாணமும்வந்து சேர்ந்துள்ளனர். (இ-31)

## ஷெல் லுக்கு அஞ்சி விழுந்தவர் காயம்

யாழ்ப்பாணம், நவ. 24

மரத்தில் சீவிக்கொண்டிருந்த சீவல் தொழிலாளி ஒருவர் ஷெல் கூவிக்கொண்டு சென்ற சமயம் பதற்றத்தினால் கீழே விழுந்தார்.

பொலிகண்டியில் நேற்றுக் காலை இச்சம்பவம் இடம்

( 5ஆம் பக்கம் பார்க்க)

# தென்மராட்சித் தாயே, நன்றி உனக்கம்மா!

தமிழ் மக்களுடைய பண்பாடு,வரலாற்றுச் சிறப்புக்கள் பலவற்றைக் கொண்ட தென்பதை மிக மிக நீண்டகாலமாகப் பேசியும் எழுதியும் வந்துள்ளோம். யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற பரந்த நோக்கே பண்டைத் தமிழ் மக்களது நோக்கென்பதையும் நாம் அறியாதவர்கள் அல்லர். எமது பண்பாட்டுப் பாரம்பரியத்தை உலகிற்கு எடுத்தியம்பும் வகையில் மீண்டும் ஒரு வரலாறு இன்று தென்மராட்சியில் படைக்கப்பட்டிருக்கின்றது.

வலிகாமம் பகுதிகளிலிருந்து இரவோடு இரவாகக் கொட்டும் மழையில் கார் காலக் கொடுங்குளிரில் சகதியில் விழுந்தும் எழுந்தும், கால் நடையாகத் திடீரெனத் தஞ்சம் புகுந்த இலட்சோப இலட்சம் மக்களைத் தென்மராட்சிப்பகுதி மக்கள் இன்முகத்துடன் வரவேற்றார்கள்' இரத்தத்தின் இரத்தங்களை அரவணைப்பதில் தென்மராட்சி மண் புளகாங்கிதம அடைந்தது. உடன் பிறப்புக்களின் வருகை கண்டு அது தன்னைத்தானே ஒருமுறை சிலிர்த்துக் கொண்டது.

### கதவுகள் திறந்தன

நடுநிசியில் வந்தவர்கள் அனைவரும் தென்மராட்சிக் கதவுகளை தட்டியபோது அக்கதவுகள் எல்லாம் தாமாகவே அகலத் திறந்து கொண்டன. வாருங்கள் வாருங்கள் முதலில் சிரமபரிகாரம் செய்து கொள்ளுங்கள்; பிறகு எல்லாம் பேசிக்கொள்வோம் என்று வந்தவர்களை மக்கள் வரவேற்று உபசரித்த அந்தக் கணமே முப்பத்தாறு மணித்தியாலங்கள் அல்ல நாற்பத்தெட்டு மணித்தியாலங்கள் நடந்து வந்த அலுப்பு களைப்பு இளைப்பெல்லாம் இருந்த இடம் தெரியாமற் போய் மறைந்து கொண்டன. அன்று திறந்த கதவுகள் இன்று வரை மூடப்படவில்லை.

சூரியபகவானின் செங்கதிர்களை நிலத்தில் பதிய விடாத சோலைகள், தென்னந்தோப்புக்கள், வளவுகள், வீதிகள் எல்லாம் மக்களுக்கு ஆறுதல் அளித்தன. அந்த ஆறுதலே ஒரு தனி இன்பம்.

அகிம்சை, அன்பு, அறவழி அரவணைப்பு, இரக்கம், ஈகை, பக்தியையே வாழ்வின் தாரக மந்திரங்களாகக் கொண்ட தென்மராட்சி மக்களது முகம் கோணாத பண்பாட்டுப் பாரம்பரியமே தமிழ் மக்களது பண்பாட்டுப் பாரம்பரியமாகும்.

இந்தப் பாரம்பரியத்தை நாம் ஒவ்வொருவரும் மதிப்போம். அதைப் போற்றுவோம் வளர்ப்போம்.அதற்கு தலை வணங்குவோம்,ஏழேழு தலைமுறைக்கும் நன்றியுடையவர்களாவோம்.

தென்மராட்சிப் பகுதி மக்களின் அன்புக்கும் பண்புக்கும் ஆதரவுக்கும் அவர்கள் தந்துள்ள அடைக்கலத்துக்கும் பண்பாட்டுக் கோலங்களுக்கும் ஆயிரம் நன்றி சொன்னால் போதுமா?

தென்மராட்சி மண்ணை, தென்மராட்சித் தாயை அநாதை இரட்சகியை, ஆபத்பாந்தவியை ஆயிரம் கூடை றோசா, முல்லை, மல்லிகை, மந்தாரை, சண்பக மலர் கொண்டு தூபதீப ஆராதனைகளுடன் வணங்குவோம். சாகும்வரை எங்கள்நன்றியை நாளெல்லாம் போற்றுவோம். ✶

— செல்லப்பா நடராசா

# சிங்கள தேசாபிமானிகளை பலாலிக்கு வரும்படி அழைக்கிறார் அனுருத்த!

கொழும்பு, நவ. 24

சிங்களத் தேசாபிமானிகள் என்று கூறிக்கொள்ளும் நபர்கள் யுத்தம் செய்வதற்காக யாழ்ப்பாணத்துக்கு நேரடியாக அனுப்பி வைக்கப்படுவார்கள். அவர்களுக்கு பலாலியில் வைத்து ஒருவார காலம் ஆயுதப் பயிற்சி அளிக்கப்படும். அதன் பின்னர் அவர்கள் யுத்தப் பிரதேசத்துக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள். அப்போது அவர்கள் தமது தேசிய வாதத்தையும் தாய்நாட்டில் உள்ள பற்றையும் எடுத்துக் காட்ட முடியும்.

பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருந்த ரத்வத்த நேற்று முன்தினம் கொழும்பில் உயர் பொலீஸ் அதிகாரிகள் முன்னிலையில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

யுத்தம் தற்போது தீர்க்கமான கட்டம் ஒன்றுக்கு வந்துள்ளது.

யாழ்ப்பாணம் விடுவிக்கப்படுமானால் மகிழ்ச்சி கொள்ளும் உரிமை மக்களுக்கு உண்டு. ஆனால் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பொறுப்பு பொலீஸாரைச்சார்ந்தது.

இன வன்செயல்களை உண்டு பண்ணக் கூடிய, தேசாபிமானிகள் என்று தம்மைக் கூறிக் கொள்வோர் குறித்து மக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

இத்தகைய சம்பவங்கள் தீர்க்கமான இக்கட்டத்தில் பின்னடைவையே ஏற்படுத்தும்

தமிழர்கள் தாக்கப்பட்டால் அல்லது அவர்களுக்கு எதிராக வன்செயல்கள் நிகழ்த்தப்பட்டால் அது மிகவும் அவமானமான செயல் ஆகும்

இப்படி அவர் மேலும் கூறினார். (இ)

# மாவீரர் நாளை ஒட்டி கொழும்பில் புலிகள் தாக்குவர் என அச்சம்

கொழும்பு, நவ. 24

எதிர்வரும் 26 ஆம் திகதி வரும் தமிழீழத்தேசியத்தலைவரின் பிறந்த நாளை ஒட்டியும் —

அதற்கு அடுத்த நாள் வரும் மாவீரர்தினத்தை ஒட்டியும்—

கொழும்பில் பெரும் குண்டுத் தாக்குதல்களை தமிழீழ விடுதலைப்புலிகள் நடத்தக் கூடும் என அரசு அஞ்சுவதாக கொழும்புப் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

யாழ்ப்பாணத்திலிருந்து பின்வாங்கியுள்ள புலிகள் வன்னியில் ஏனைய பகுதிகளில் உள்ள அரச படைகளின் முகாம்கள் மீது தமது கவனத்தைச் செலுத்தக் கூடும் என்றும் அரசுத் தரப்பு அஞ்சுகின்றது.

வவுனியா, மணலாறு, முல்லைத் தீவு, திருகோணமலை பிரதேசங்களில் உள்ள இராணுவ முகாம்கள் புலிகளின் தாக்குதல்களுக்கு இலக்காகலாம் எனக் கருதப்படுவதால் அப்பிரதேசத்தில்உள்ள துருப்புகள் உஷார் படுத்தப்பட்டுள்ளன. — இவ்வாறு அந்தப்பத்திரிகைகள் மேலும் தகவல் வெளியிட்டன. (உ)

## மருதங்கேணியில் போர் எழுச்சி பவனி

செம்பியன்பற்று, நவ. 24

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பகுதியில் கிராமங்கள் தோறும் போர்ப்பவனிகளும், வீதி நாடகங்களும் நடைபெற்று வருகின்றன.

இராணுவ நடவடிக்கைகளால் ஏற்பட்டுள்ள அவல நிலையையும், தமிழ் மக்கள் மண் மீட்பு போரில் இணைய வேண்டியதன் அவசியத்தையும் விளக்கும் வகையில் வீதி நாடகங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

பல இடங்களில் போர் எழுச்சிப் பவனியும், கூட்டங்களும் நடைபெற்றன. (ஐ-36)


## உதயன் விற்பனை முகவர்களுக்கு

இடம்பெயர்ந்துள்ள உதயன் விற்பனை முகவர்கள் உட்பட அனைத்து விற்பனை முகவர்களையும் எதிர்வரும் திங்கட்கிழமை (27 - 11 - 95) காலை 10-30 மணிக்கு எங்கள் பணிமனைக்குத் தவறாது வருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நிர்வாகத்தினர்

உதயன் பணிமனை,
பருத்தித்துறை வீதி,
(கனகம்புளியடிச் சந்திக்கு அருகாமையில்)
சரசாலை.

## உதயன் செய்தியாளருக்கு

இடம்பெயர்ந்து தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளில் வதியும் உதயன் பிரதேச சொய்தியாளர்களையும், மற்றும் அனைத்துப் பகுதிச் செய்தியாளர்களையும் எதிர்வரும் திங்கட்கிழமை (27 - 11 - 95) காலை 10-30 மணிக்கு உதயன் பணிமனைக்கு தவறாது சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நிர்வாகத்தினர்

உதயன் பணிமனை,
பருத்தித்துறை வீதி,
(கனகம்புளியடிச் சந்திக்கு அருகாமையில்)
சரசாலை.

## யாழ். கிளினிக் சென்ரர்

பொது வைத்தியமும், வைத்திய நிபுணர்களின் ஆலோசனையும் வழங்கப்படும்

இடம்:-
மந்திகை ஆஸ்பத்திரி முன்பாக

(39368)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## இராணுவ பலம் சம நிலையில்!

வடபகுதிக் கடலில், நான்கு நாள் இடைவெளியில் ஸ்ரீலங்கா விமானப்படைக்குச் சொந்தமான இரண்டு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன!

யாழ்ப்பாண நகரத்தை இராணுவம் இதோ கைப்பற்றப் போகிறது என்று அரச பாதுகாப்புப் படை உயர் அதிகாரிகள் அடுத்தடுத்து அறிக்கைகள் விட்டுக்கொண்டிருக்கும் வேளையில் —

ஞாயிற்றுக்கிழமை காலையில் சினச் சகடை என அழைக்கப்படும் ''வை - 8'' விமானமும், புதன்கிழமை மாலையில் ''அன்ரனோவ்'' விமானமும் வடபகுதிக் கடற் பிராந்தியங்களில் வீழ்த்தப்பட்டன.

இரண்டு விமானங்களும் படையினரை ஏற்றி இறக்கவும், அவர்களுக்குத் தேவையான ஆயுத மற்றும் உபகரணங்களை எடுத்து வரவும் பயன்படுத்தப்படும் விநியோக, போக்குவரத்து விமானங்களாகும்.

''வை'' — எட்டு விமானம் வடமராட்சிக் கடலில் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது. அன்ரனோவ் — 32 — தீவுப்பகுதிக் கடலில் வீழ்த்தப்பட்டுள்ளது. இதனையும் விடுதலைப் புலிகளே சுட்டு வீழ்த்தினர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்று முற்பகலில் ஊர்ஜிதம் செய்தன.

யாழ். நகரையும் வலிகாமத்தையும் கைப்பற்றினாலும் கூட, அது அரச படைகளுக்கோ அரசுக்கோ வெற்றியாக இருக்கப்போவதில்லை என்பது ஒரு புறமிருக்க —

படையினர் நிம்மதியாக இருக்கப்போவதில்லை; அவர்கள் கருதும் வெற்றி நிலை பெறப் போவதில்லை என்பதனையே விமானங்கள் வீழ்த்தப்படும் சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

பலாலியில் இருந்து யாழ்ப்பாண நகருக்கு வந்து சேரும் இராணுவ நடவடிக்கை வெற்றி அளித்துவிட்டால், விடுதலைப் புலிகளை தங்களால் வெல்ல முடியும்; பலவீனப்படுத்த முடியும் என நிரூபிப்பதாகும் என்று சந்திரிகாவும், அனுருத்த ரத்வத்தையும் நினைக்கிறார்கள்.

அது தவறு; களத்தில் சற்றுத் தளர்வு ஏற்பட்டாலும், தற்காலிக பின்னடைவு உண்டானாலும், அதனை ஈடு செய்யும் விதத்தில் படைகளைப் பாதிக்கும் வெற்றிகளை ஈட்டமுடியும் என்பதனை விமானங்களைச் சுட்டு வீழ்த்துவதன் மூலம் விடுதலைப் புலிகள் காட்டி வருகிறார்கள்.

மக்கள் இல்லாத சூனியப் பிரதேசங்களை இராணுவத்தினர் ஆக்கிரமித்தாலும் தமிழ் மண்ணின் கடலையும், வானத்தையும் தங்களால் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும் என்பதனை விடுதலைப் புலிகள் தங்கள் தாக்குதல்கள் மூலம் எடுத்துக் காட்டி வருகின்றனர்.

இது ஒரு வகையில் இரு தரப்புக்கும் இடையே இராணுவ பலத்தில் ஒரு சமநிலையைக் காட்டுகிறது என்று கொள்ளலாம்.

போர் ஒரு தீர்க்கமான கட்டத்தை அடைந்திருப்பதாக அமைச்சர் அனுருத்த கூறியிருக்கிறார். அதாவது தமது படைகள் இராணுவ பலத்தில மேலோங்கி நிற்பதாகப் பூடகமாகச் சொல்கிறார். அரைவேக்காட்டு அரசியல் தீர்வை தமிழர் மீது திணிக்கும் பலம் தமக்கு வந்துவிட்டதாக நினைக்கிறார்.

அது பெரும் தவறு என்பதனை விடுதலைப் புலிகள் தொடர்ந்து எடுத்துக்காட்டிக் கொண்டிருப்பார்கள் என எதிர்பார்க்கலாம்.

# ஒரு டாக்டர் 3 தாதிகள் அடங்கிய செஞ்சிலுவைச் சங்க வைத்தியர்குழு

## சுகாதார தேவை குறித்து ஆராயும்

சாவகச்சேரி, நவ. 24

இடம்பெயர்ந்த மக்களின் சுகாதாரப் பிரச்சினைகள் மற்றும் தொற்று நோய் தடுப்பு போன்றவற்றை கவனிக்க செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் வைத்தியர்குழு ஒன்று இன்று வருகிறது.

'ஹபரண' கப்பலில் பருத்தித்துறைக்கு வந்து சேரும் இக்குழுவில் ஒரு டாக்டரும், 3 தாதிகளும், ஒரு சுகாதாரப் பொறியியலாளரும் அங்கம் வகிப்பர்.

இடம்பெயர்ந்துள்ள மக்களின் சுகாதார நிலை, மலசலகூட வசதிகள் தொற்றுநோய தடுப்பு போன்ற பணிகளில் சுகாதார திணைக்களத்துடன் இணைந்து இக்குழு செயற்படும்.

இருமாத காலம் இங்கு தங்கத் திட்டமிட்டுள்ள இக்குழு அகதி முகாம்களுக்கு விஜயம் செய்யும். (இ-3)

## மாவுடன் ஹபறண இன்று வருகிறது

திருகோணமலையில் இருந்து ஆயிரத்து 500 மெற்றிக் தொன் மாவுடன் 'ஹபறண' கப்பல் இன்று பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்று பிற்பகலில் ஹபரண கப்பல் திருகோணமலையில் இருந்து வடக்கு நோக்கிப் புறப்பட்டதாக தகவல் கிடைத்தது என்றும் —

இன்று கப்பல் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என்றும் —

முன்னுரிமை அடிப்படையில் இக்கப்பலில் பொருள் இறக்கும் பணி நடைபெறும் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

தற்சமயம் பருத்தித்துறையில் பொருள் இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ள 'குமண' கப்பலின் வேலைகள் இடைநிறுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## ஜனாதிபதி செயலகம் கோரிக்கை

கொழும்பு, நவ. 24

இனக்கலவரங்களைத் தூண்டிவிட்டு அமைதியைக் குழப்ப எத்தனிப்போர் பற்றிய தகவல்களை விசேட பொது மக்கள் உறவுப்பிரிவிடம் அறிவிக்குமாறு நாட்டு மக்களை ஜனாதிபதி செயலகம் கேட்டுள்ளது.

தகவல்களை வழங்க வேண்டிய தொலைபேசி இலக்கங்களையும் ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ளது.

இதேவேளை —

சட்டத்தையும் ஒழுங்கையும் மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு ஆயுதப் படையினருக்கும் பொலீஸாருக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது. (இ-ஐ)

## தொண்டர் அமைப்புகளின் பிரதிநிதிகள் இன்று வருகை

இடம் பெயர்ந்துள்ள மக்களின் கஷ்டங்கள் குறித்து ஆராய சர்வதேச தொண்டர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் இன்று யாழ்ப்பாணம் வரவிருக்கின்றனர்.

இன்று பருத்தித்துறைக்கு வந்து சேரவிருக்கும் 'ஹபரண' கப்பலில் இவர்கள் வரவிருக்கின்றனர்.

பிரேஞ்சு வைத்திய அமைப்பு. ஐக்கிய இராச்சிய சிறுவர் பாதுகாப்பு நிதியம். ஒக்ஸ்பாம் ஆகிய அமைப்புக்களின் பிரதிநிதிகளே இன்று வரவிருக்கின்றனர்.

இந்த் தொண்டர் அமைப்புக்களின் அலுவலகங்கள் மேற்கொள்ளும் வேலைகளை மதிப்பிடும் இவர்கள் மக்களுக்கு மேலும் வழங்கப்பட வேண்டிய தேவை குறித்தும் ஆராய்வார்கள்.

அமைப்புகள் மேற்கொள்ளும் நிவாரணப் பணிகளுக்கு தேவையான பொருள்களும் இக்கப்பலில் எடுத்துவரப்படுகிறது. (இ-3)

## ஆசிரியர்களின் சம்பளம் இன்று முதல் வழங்கப்படும்

யாழ் மாவட்ட ஆசிரியர்களுக்குரிய நவம்பர் மாதச் சம்பளம் இன்று வழங்கப்படவிருப்பதாக வலயம் ஒன்றின் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் தெரிவித்தார்.

பாடசாலை அதிபர்கள் தமது பாடசாலைச் சம்பள்ப் பட்டியலை தமது கோட்டக் கல்வி அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் —

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்துள்ள கோட்டங்கள் தற்காலிகமாக சாவகச்சேரி கோட்டப் கல்வி அலுவலகத்தில் இயங்குவதால் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் அதிபர்களைச் சந்தித்து ஏற்ற ஒழுங்குகளை செய்து கொள்ளுமாறும்— கல்விப்பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)

## இறுதி வீரவணக்கமும் வித்துடல்கள் விதைப்பும்

சாவகச்சேரி, நவ. 24

யாழ் மாவட்டத்தின் நாயன்மார்கட்டு, அரியாலைப் பகுதிகளில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் ''சூரியப் பிரகாசம்'' தொடர் நடவடிக்கையின்போது 21 ஆம் 22 ஆம் திகதிகளில் வீரச்சாவைத்தழுவிக் கொண்ட வீ.வே. மஞ்சுளா (நாகராஜா விஜிதா, மானிப்பாய் வீதி, தாவடி தெற்கு), வீ. வே. வளவன் (சின்னராஜா ராஜமேனன், மாசார், பளை), வீ. வே. காதம்பரி (பரமசாமி கலாவதி, மீசாலை வடக்கு), வீ. வே. இராவணன் (கதிர்காமத்தம்பி சாந்தலிங்கம், சங்குவேலி மானிப்பாய்) —

வீ. வே. ஈழமோகன்/ வல்லவன் (கிருஷ்ணபிள்ளை பகீரதன், யாழ். வீதி, யாழ்ப்பாணம்) ஆகிய மாவீரர்களின் வித்துடல்கள் இன்று பி. ப. 3 மணிவரை மீசாலை தென்மராட்சிக் கோட்ட மாவீரர் பணிமனையில் பெற்றோரின் வருகைக்காக வைக்கப்பட்டிருக்கும்.

அதன் பின்னர் இம்மாவீரர்களின் வித்துடல்கள் வரணி ஆயிரம் வீட்டுத் திட்டக் குடியேற்றத்திற்கு எடுத்துச் செல்லப்படும் அங்கு மக்களின்

(6 ஆம் பக்கம் பார்கக)

## வெளிநாடுகளுக்கு தகவல் அனுப்ப உப அலுவலகம்

### சாவகச்சேரியில் இயங்கும்

சாவகச்சேரி, நவ 24

வலிகாமத்தில் இருந்து இடம் பெயர்ந்துள்ள மக்கள், தமது நலன்கள் குறித்த தகவல்களை வெளி நாடுகளுக்கு அனுப்ப வசதியாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவின் உப - அலுவலகம் ஒன்று சாவகச்சேரியில் எதிர்வரும் திங்கள் முதல் செயற்படவிருக்கிறது.

இடம்பெயர்ந்த மக்கள் தமது நிலை குறித்த விடயங்களை சிறிய செய்தியாக கையளிக்கும் பட்சத்தில் உடனடியாக கொழும்பு அலுவலகம் ஊடாக உறவினர்களுக்கும் அவற்றை அனுப்ப செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு வசதி செய்துள்ளது.

வெளிநாடுகளுக்கு அனுப்பும் செய்தி பெரிதாக இருந்தால் அது கப்பல் மூலம் கொழும்புக்கு அனுப்பப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரியில் உள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் அலுவலகத்தின் இயங்கவிருக்கும் உப- அலுவலகத்தில் மக்கள் தமது செய்திகளை கையளிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## ராணுவத்துக்கு பலத்த அடி என்கிறார் ஹரி குணதிலக்க

அன்ரனோவ் விமானம் வீழ்ந்து நொறுங்கியது இராணுவத்துக்கு பலத்த அடி என்று முன்னாள் விமானப் படை தளபதி ஹரி குணதிலகா கூறினார்.

விமானப் போக்குவரத்து இன்றிபடையினருக்குபோதிய ஆதரவை இராணுவம் வழங்க முடியுமா என்பது தெரியவில்லை என்றும் அவர் கூறினார். (இ-3)

# வன்னிப் பகுதிக்கு இடம்பெயரும் விவசாயிகள் பயிர் செய்ய காணி!

சாவகச்சேரி, நவ 23

தற்போது நடைபெற்று வரும் இராணுவ நடவடிக்கையினால் யாழ். குடாநாட்டில் இருந்து இடம் பெயர்ந்துள்ள விவசாயிகள் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் காணி வழங்கநடவடிக்கை எடுத்துள்ளது.

பின்வரும் இடங்களில் பயிர்ச்செய்கையை மேற் கொள்ளக் கூடிய காணிகள் உள்ளதாகவும் —

மன்னகுளத்தில் 70 ஏக்கரும், —

மேற் குளத்தில் 35 ஏக்கரும் உள்ளதாகவும்,

மேட்டு நிலப்பயிர்ச் செய்கைக்காக விளாத்திக்குளத்தில் 20 ஏக்கரும், —

கிழவன் குளத்தில் 25 ஏக்கரும், —

மன்னகுளத்தில் 60 ஏக்கரும், —

புதுவிளான்குளத்தில் 60 ஏக்கரும், —

மேற்குளத்தில் 60 ஏக்கரும், —

கொல்லப் புளியங்குளத்தில் 30 ஏக்கரும் உள்ளதாகவும்

சிறுதானியப் பயிர்ச்செய்கைக்காக புதுவிளான்குளத்தில் 200 ஏக்கரும் உள்ளதாகவும்.

இந் நிலங்களைப் பயன்படுத்தி பயிர்ச்செய்கை மேற்கொள்ள விரும்பும் விவசாயிகள்உடனடியாக தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

தாமாகவே பயிர்ச்செய்கையைமேற்கொள்ளவுள்ள விவசாயிகள்தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வட்ட கோட்ட அலுவலகங்களில் பெயர்களை பதிவு செய்து கொள்ளுமாறும் — தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கேட்டுள்ளது.

இந்த பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்காக விளாத்திக் குளத்தில் 40 ஏக்கரும் —

## ஷெல்லுக்கு...

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றது.

அல்வாய் மேற்கைச் சேர்ந்த வேலாயுதம் கலைச்செல்வம் (வயது 38) என்பவரே காயமடைந்தவராவார்.

சீவல் தொழிலாளியான இவர் மரத்தில் சீவிக் கொண்டிருந்த சமயம் தலைக்கு மேலால் ஷெல் கூவிக் கொண்டு போனதை அடுத்து பதற்றத்தினால் மரத்தில் இருந்து கீழே விழுந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர் [illegible] அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

## வயோதிபரின் சடலம்

வடமராட்சி, நவ. 24

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வயோதிபர் ஒருவரின் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

நோயினால் வார்டில் அனுமதிக்கப்பட்டு கடந்த புதன்கிழமை மரணமான இவ் வயோதிபரின் சடலம், உறவினர்கள் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டுள்ளது. (இ-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்
## கிளை நிலையம் சாவகச்சேரி

வாசகர்கள், விளம்பரதாரர்கள்
செய்தியாளர்களே!

உங்கள் வசதி கருதி
எங்கள் கிளை நிலையம்

சாவகச்சேரி நவீன சந்தை
மேல்மாடி 9 ஆம் இலக்கத்தில் இயங்குகிறது

★ செய்தி ★ விளம்பரம்
★ பத்திரிகை விநியோகம்

காலை 8. 30 மணி முதல் மாலை 6 மணிவரை தொடர்பு கொள்ளலாம்.


# அன்ரனோவ் வீழ்ந்தது குறித்து ஒன்றுக்கொன்று முரணான தகவல்

கொழும்பு, நவ. 24
பலாலிக்கு தரையிறங்க சென்றவேளை காணாமற் போனதாகக் கூறப்பட்ட அன்ரனோவ்-32 பி ரக விமானம் வீழ்ந்து நொறுங்கியது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு ஒன்றுக்கொன்று முரணான தகவல்களை வெளியிட்டு வருகிறது.

இந்த விமானம் விடுதலைப் புலிகளால் ஏவுகணையால் சுட்டு வீழ்த்தப்பட்டதாக நேற்றுக் காலை பாதுகாப்பு அமைச்சு உள்நாட்டு, வெளிநாட்டு பத்திரிகையாளர்களுக்குத் தெரிவித்திருந்தது.

ஆனால் நேற்று மாலை பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட தகவலில் விமானம் இயந்திர கோளாறு காரணமாக வீழ்ந்ததாகத் தெரிவித்துள்ளது.

விமானம் வீழ்ந்து நொறுங்கியதற்கு விமானியின் தவறு, அல்லது தொழில்நுட்பக் கோளாறு அல்லது விமானத்துள் இருந்த வெடிப் பொருள்கள் காரணமாக இருந்திருக்கலாம் என்றும் வெடிபொருள் தவறுதலாக வெடித்திருக்கலாம் என்றும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்ததாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

இது தொடர்பாக வெளிவரும் முரண்பாடான தகவல்கள் அதிகாரிகள் மத்தியில் நிலவும் குழப்பத்தையே காட்டுவதாக சுட்டிக்காட்டப்பட்டது. (இ-3)

# மேலும் 2 ஆயிரம் குடும்பங்களுக்கு உதவி
## கெயர் நடவடிக்கை

சாவகச்சேரி, நவ. 24
இடம்பெயர்ந்த மக்களில் மேலும் 2 ஆயிரம் குடும்பங்களுக்கு வழங்கவென நிவாரண உதவிப் பொருள்கள் ''கெயர்'' நிறுவனத்துக்கு கப்பல் மூலம் வரவிருக்கின்றன.

இடம்பெயர்ந்தவர்களுக்கு உடனடித் தேவையான பாய் படுக்கை விரிப்பு, பிளாஸ்டிக் வாளி, பாத்திரங்களை கெயர் நிறுவனம் வழங்கி வருகிறது.

இந்த அமைப்பிடம் கையிருப்பில் இருந்த பொருள்கள் 2 ஆயிந்து 500 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வருவதாகவும் —

மேலும் 2 ஆயிரம் குடும்பங்களுக்கு வழங்க தேவையான உடுபுடைவைகள், பிளாஸ்டிக் வாளிகள் இன்று வரும் ஹபரண கப்பலில் வருவதாகவும் — இந்த அமைப்பின் யாழ். மாவட்ட இணைப்பாளர் திரு. அருள்ஞானம் தெரிவித்தார். (இ-3)

## கொட்டதெனிய..
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
கிறார்.

இந்த திடீர் இடமாற்றம் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை ஆகும் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## காயமடையும்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ஆரம்பிக்கப்பட்டது. எனவே படையினருக்கான உணவு, ஆயுத விநியோகம் உடனடியாகப் பாதிக்கப்பட மாட்டாது என்றும் —

காயமடைந்த படையினரைக் கொண்டு செல்லும் சேவையே பெரிதும் பாதிக்கப்படும் என்றும் பாதுகாப்புச் செய்தியாளர் ஒருவர் தெரிவித்திருக்கிறார். (ஐ 6)

## அரியாலை-...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
நோக்கி கடும்ஷெல் தாக்குதல் மற்றும் பீரங்கித்தாக்குதலை மேற்கொண்டவாறு டாங்கிகள் சகிதம் படையினர் முன்னேற முயன்றனர்.

அவர்களை இடைமறித்த விடுதலைப்புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் கடும் சமர் நடந்ததாகவும்—

சண்டை நேற்றிரவும் தொடர்ந்ததாகவும் —களச் செய்திகள் தெரிவித்தன. படையினரின் அகோர பீரங்கித் தாக்குதலுக்கு இலக்காகி வீடுகள் பல நாசமாகின.

மக்களின் சொத்துக்களும் நாசமாகின. (இ-3)

## பிளாஸ்ரிக்...
(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)
மலசலகூடம் அமைப்பது எனவும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இறைச்சிக்கடை, தேநீர்க்கடை என்பவற்றை பிரதேச சபை உறுப்பினர்கள் கண்காணிக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

எழுதுமட்டுவாழ் பகுதியிலேயே இடம்பெயர்ந்தோருக்கு குடிசைகள் அமைக்கப்பட உள்ளன. (இ-36)

## அறுதி..
(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)
இறுதி வீரவணக்கத்துக்காக வைக்கப்பட்டு மாலை 4. மணியளவில் இறுதி வீரவணக்கக் கூட்டம் நடைபெறும். அங்கிருந்து அணிவகுப்பு மரியாதைகளுடன் வித்துடல்கள் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச்செல்லப்பட்டு இறுதி இராணுவ மரியாதைகளுடன் புனித விதைகுழிகளில் விதைக்கப்படும். (இ-3)

## காரைநகருக்கு...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
கள் நடத்தப்பட்டு வருவதாக அமைச்சரவைத் தீர்மானங்களை வெளியிடும் பத்திரிகையாளர் மாநாட்டில் விமானப் படையின் பிரதம உத்தியோகத்தர் எயார் வைஸ் மார்சல் அஞ்சலோ பீரிஸ் தெரிவித்தார்

விசாரணைகள் முடிவடையும் வரை இறுதித் தீர்மானங்கள் எதனையும் எடுக்க முடியாது என்றும் — அவர் கூறினார்.

எனினும் இயந்திரக்கோளாறு, தாக்குதல், அல்லது விமான ஓட்டியின் தவறு என்பன காரணமாக இந்த அனர்த்தம் நிகழ்ந்திருக்கலாம் என்ற சாத்தியக் கூறுகளை நிராகரிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த விமான அனர்த்தம் சூரியப்பிரகாசம் இராணுவ நடவடிக்கையை எவ்விதத்திலும் பாதிக்காது என்றும் —

இராணுவ நடவடிக்கைக்கு இலங்கை விமானப்படை ஒத்துழைப்பு வழங்க எந்நேரத்திலும் ஆயத்தமாக இருப்பதாவும் அவர் தெரிவித்தார். (ஐ)

## அடுத்தடுத்து...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
இராணுவத்தின் வேகத்தைக் கட்டுப்படுத்தும் என்று சில இராணுவ அதிகாரிகளே ஏற்றுக் கொண்டிருப்பதாக 'வெரித்தாஸ்' வானொலி தெரிவித்தது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் திரு. பிரபாகரனின் பிறந்த தினத்துக்கு முன்னராக யாழ். நகரை முழுவதுமாகக் கைப்பற்றிவிடுவோம் என்று சூளுரைத்திருந்த சுமார் 35 ஆயிரம் படையினரும் சுட்டு வீழ்த்தப்பட்ட இந்த அன்ரனோவ் — 32 விமானத்தையே உணவு மற்றும் ஆயுதங்களுக்காக நம்பியிருந்தனர் என்றும் ''வெரித்தாஸ்'' குறிப்பிட்டது. (ஐ)

# மரண அறிவித்தல்கள்

## வைத்திலிங்கம் துரையப்பா
(துரைச்சாமி)

உடுவில், கற்பக்குணையைப் பிறப்பிடமாகக் கொண்ட வைத்திலிங்கம் துரையப்பா (துரைச்சாமி) அவர்கள் 22- 11- 95 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் அன்னம்மாவின் அன்புக்கணவரும், முன்னாள் பொலீஸ் உத்தியோகத்தர் சின்னத்தம்பி சண்முகத்தின் மைத்துனரும், பாஸ்கரன், பிரபாகரன் (லண்டன்) ஆகியோரின் தந்தையும், வசந்தியின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 23- 11- 95 (வியாழன்) நடைபெற்று பூதவுடல் வல்லை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், அனைவரும் ஏற்றுக்கொள்வும்.

தகவல்:
து. பாஸ்கரன்
(மகன்)

தற்போதைய முகவரி:
புறாப்பொறுக்கியாலடி,
கரணவாய் மேற்கு,
கரவெட்டி.

(39369)

## அத்தோனிப்பிள்ளை யோசவ்

நாரந்தனை வடக்கு அந்தோனிப்பிள்ளை ஜோசவ் 16-11-95 ஆம் திகதி காலமாகிவிட்டார்.

இவர் மாணிக்கத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சவரிமுத்து பொன்னையாவின் அன்புச் சகோதரரும், அஞ்சலா, லீலா ஆகியோரின் அன்புத் தந்தையும், மரியதாஸ் அவர்களின் மாமனும், அன்ரனி, பஸ்ரியன் (குணம்), பற்றிக் ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 17-11-95 ஆம் திகதி கரவெட்டி சேமக்காலையில் நடைபெற்றது.

தகவல்:
அ.ச. அன்ரனிப்பிள்ளை
(அன்ரனி)
டயானி இன்டஸ்றீஸ்

C/o கதிர்காமநாதன்,
சேர்ச் லேன்,
நுணாவில்.

(39373)

## திருமதி ஞானமலர் குணநாயகம்

தோப்பு, ஏழாலை தெற்கைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியை திருமதி ஞானமலர் குணநாயகம் நேற்று (23-11-95) அகால மரணமானார்

இவர் காலஞ்சென்ற சின்னையா அல்பேட் குணநாயகம் (லிகிதர், யாழ்ப்பாணக் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும், இரஞ்சினி, மனோரஞ்சன் (ஆசிரியர், அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை), சுகந்தினி (U.K), வினோதினி (ஆசிரியர்), சுகந்தன் (Millers Ltd.) ஆகியோரின் பாசமிகு தாயாரும், G.D ஜெயரத்தினம் (Lanka Cement Ltd.), மனோகரி (மருத்துவ பீடம், யாழ். பல்கலைக்கழகம்), ஜோன் (U.K), இராஜ்குமார், டயாளினி (ஆசிரியர்) ஆகியோரின் மாமியாரும், ஜெயரஞ்சிற், ஜெயந்தன், ஜெயரூபன், நிஷாந்தி, நிரோஜன், டானியல் சாள்ஸ், ஜோயல் கிறிசாந், சுஜாதா (U.K) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

இவரின் நல்லடக்க ஆராதனை நுணாவில் கிழக்கில் உள்ள திரு. S.V. வைத்திலிங்கம் (ஆசிரியர் - J.P) அவர்களின் ''கிருபாபதி'' இல்லத்தில் இன்று காலை 9-00 மணிக்கு நடைபெற்று நல்லுடல் சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபையின் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு. மனோரஞ்சன்
(மகன்)

(39371)

# வீரச்சாவு

## முருகையா உமாசுதன்

முருகையா உமாசுதன் (பெருந்திண்ணன்) 22.11.1995 அன்று வீரச்சாவடைந்தார்.

இவர் ச. முருகையா சீதாதேவி (வசந்த வாசம்-கட்டுடை) அவர்களின் மூத்த புதல்வனும் ரஜனி (யாழ் தொழில் நுட்பக்கல்லூரி), சுதாகரன் (கொழும்பு) முகுந்தினி (உடுவில் மகளிர் கல்லூரி க. பொ. த உயர்தர மாணவி) அவர்களின் அன்புச சகோதரனுமாவார்.

இவரின் ஈமக்கிரியைகள் 7 ஆம் வாய்க்கால், உருத்திரபுரத்தில் நடைபெறும்.

இவவறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
குடும்பத்தினர்

(39370)

## வீரவேங்கை மஞ்சுளா
(நாகராஜா விஜிதா- மகாஜனாக்கல்லூரி)

கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகவும் தற்போது நுணாவிலை வதிவிடமாகவும் கொண்ட வீரவேங்கை மஞ்சுளா [நாகராசா விஜிதா] 21- 11- 95 இல் வீரச்சாவடைந்துள்ளார். இவரின் வித்துடல் 24- 11- 95 கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் புனித விதை குழியில் விதைக்கப்படும்,

இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்,

தகவல்:
சி. நாகராஜா குடும்பத்தினர்

தற்போதய முகவரி
க. செல்வராசா
அக்பர் வீதி,
நுணாவில்

(39374)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) [?] லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 24-11-95 இல் அச்சிட்டு [?] வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org